இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம்:10.8.1942 – முரசு: 83 – ஒலி: 109 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 13 – வியாழக்கிழமை 28 நவம்பர் 2024 – திருச்சி ★ ★ 16 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 109: Thiruvalluvar Year - 2055 - Karthigai 13 - Thursday 28 November 2024 - Trichy ★★ 16 + 12 Pages ₹ 5.00



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

## தலைமைச் செயலகத்தில் இந்திய அரசியலமைப்பு தினம் கொண்டாட்டம்!

# அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசித்து உறுதிமொழியேற்பு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ. 28 -

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75ம் ஆண்டை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.**

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத்திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. மேலும் நவம்பர் 26ஆம் தேதி தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், உயர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75ம் ஆண்டை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையை,



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.11.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு நாளையொட்டி இந்திய அரசமைப்பு முகப்புரை வாசிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இந்திய மக்களாகிய நாம் இந்திய நாட்டினை இறையாண்மையும், சமதர்மமும், சமயச்சார்பின்மையும், மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும், அதன் குடிமக்கள் அனைவரும் சமூக, பொருளாதார, அரசியல், நீதி எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் சுதந்திரம்**

**சமுதாயப் படிநிலை, வாய்ப்பு நலம் இவற்றில் சமத்துவம் ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவத்தை வளர்க்கவும், உள்ளார்ந்த உறுதியுடையராய்,**

**நம்முடைய அரசியல் நிர்ணய சபையில் 1949 நவம்பர் 26 ஆம் நாளாகிய இன்று, இங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

**அன்பு, சமாதானம் மற்றும் சமத்துவம் நிறைந்த இந்தியாவை உருவாக்கிட அரசியலமைப்புச் சட்டத்தை நாம் பாதுகாக்க உளமார உறுதியேற்போம்.**

- என்று வாசித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாசிக்க, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரை நேற்று (27.11.2024) முதல்வர் அவர்களின் முகாம் அலுவலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி வாழ்த்துப் பெற்றார்.

